இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

யூதர்கள் அரும் அடையாளங்கள் வேண்டும் என்று கேட்கிறார்கள்; கிரேக்கர் ஞானத்தை நாடுகிறார்கள். ஆனால் நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப்பற்றிப் பறைசாற்றுகிறோம். அச்சிலுவை யூதருக்குத் தடைக் கல்லாகவும் பிற இனத்தாருக்கு மடமையாயும் இருக்கிறது. ஆனால் அழைக்கப்பட்டவர்கள், யூதரானாலும் கிரேக்கரானாலும், அவர்களுக்குக் கிறிஸ்து கடவுளின் வல்லமையும் ஞானமுமாய் இருக்கிறார். ஏனெனில் மனித ஞானத்தை விடக் கடவுளின் மடமை ஞானம் மிக்கது; மனித வலிமையைவிட அவருடைய வலுவின்மை வலிமை மிக்கது. (1கொரி 1: 22-25)

# ‘அமைதியான எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப முயற்சிப்போம்’


## திருத்தந்தை அறைகூவல்

வத்திக்கான்: மிகவும் கடுமையான மனிதாபிமானமற்ற சூழ்நிலையை ஏற்படுத்திய, சூடான் நாட்டு ஆயுத மோதல் தொடங்கி, பத்து மாதங்களைக் கடந்துவிட்டது என்றும், அன்பான சூடான் மக்களின் அமைதியான எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப, அமைதிக்கான வழிகளை விரைவில் கண்டறிய சிறப்பாக செபிப்போம் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

பிப்ரவரி 18 ஞாயிற்றுக்கிழமை வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் கூடியிருந்த ஏறக்குறைய 15000 திருப்பயணிகளுக்கு வழங்கிய மூவேளை செப உரையின் இறுதியில் இவ்வாறு எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உலக அமைதிக்காக செபிக்க வலியுறுத்தினார்.

மொசாம்பிகாவின் காபோ டெல்காதோ பகுதியில் அதிகரித்து வரும் பாதுகாப்பற்ற கட்டமைப்பினால் ஏற்படும் அழிவு குறித்து எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், ஆப்ரிக்காவில் உள்ள தூய Mazeze அன்னை கத்தோலிக்க பணி நிலையம் அண்மையில் தீவைத்து எரிக்கப்பட்டது குறித்த தனது வேதனையைத் தெரிவித்து, பாதிக்கப்பட்ட அப்பகுதியானது அமைதியை மீண்டும் திரும்பப்பெற செபிக்கவேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

போர் மற்றும் மோதல்களால் தங்களது இரத்தத்தை சிந்திக்கொண்டிருக்கும் ஆப்ரிக்க கண்டத்தில் வாழும் மக்கள்




மட்டுமன்றி, ஐரோப்பா, பாலஸ்தீன், உக்ரைன் ஆகிய பகுதிகளில் வாழும் துன்புறும் மக்களுக்காகவும் செபிக்கக் கேட்டுக்கொண்டார்.

போர் எப்போதும் தோல்வி தான் என்பதை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது என்று வலியுறுத்திய திருத்தந்தை அவர்கள், அழிவைத் தருகின்ற, முடிவற்ற, பயனற்ற, பிரச்சனைகளுக்குத் தீர்வைத்தராத இப்போரினால் மக்கள் சோர்வடைகின்றார்கள் என்றும் எடுத்துரைத்தார்.

நமது செபம் பயனுள்ளது என்பதை உணர்ந்து சோர்வடையாமல் தொடர்ந்து அமைதிக்காக செபிப்போம் என்று கூறிய திருத்தந்தை அவர்கள், அமைதிக்காக அர்ப்பணிக்கப்பட்ட நல்ல மனதையும் இதயத்தையும் இறைவனிடம் கொடையாகக் கேட்போம் என்றும் கூறினார்.
உரோம் நகரின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருந்த திருப்பயணிகளை வாழ்த்திய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பிப்ரவரி 18 ஞாயிற்றுக்கிழமை மாலை முதல் தான் தொடங்க இருக்கும் தவக்கால தியானம் பற்றியும் திருப்பயணிகளுக்கு எடுத்துரைத்தார்.

உரோமை சக பணியாளர்களுடன் இணைந்து தவக்கால தியானத்தைத் தொடங்க இருப்பதாக எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், இத்தவக்காலத்திலும், யூபிலி ஆண்டிற்காக தயாராகும் இச்செப ஆண்டு முழுவதிலும், கடவுளின் உடனிருப்பை உணரும் விதமாக அவர்முன் கூடிவருவதற்கான அதிக வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும் என்று திருப்பயணிகளிடம் கேட்டுக்கொண்டார்.

*மெரினா ராஜ் – வத்திக்கான்*

# சிப்பாங், சுங்கை பிளேக் சிற்றாலயத்தில் குழந்தை இயேசு திருவிழா கொண்டாடப்பட்டது

**சிப்பாங்:** இங்கு சுங்கை பிளேக் என்ற சிறு நகரில் அமைந்துள்ள குழந்தை இயேசு சிற்றாலயம் பலர் அறிந்திராத ஒரு சிற்றாலயம் என்றால் மிகையாகாது. இந்நகரின் சாலையோரம் ஏறக்குறைய நான்கு ஏக்கர் நிலத்தல் அமைந்திருக்கும் இச்சிற்றாலயத்தில், பல வருடங்களுக்குப் பின், கடந்த பிப்ரவரி 3-ஆம் திகதி, அருள்பணி எட்வின் பீட்டர் அவர்களின் ஏற்பாட்டில் ‘குழந்தை இயேசு’ திருவிழா மிகக் குறுகியக் கால ஏற்பாட்டில் கொண்டாடப்பட்டது.

ஏற்குறைய 25 கத்தோலிக்கக் குடும்பங்கள் வசிக்கும் இப்பகுதியைச் சுற்றிலும், தெலுக் மெர்பாவ், சுங்கை லீனாவ், சிப்பாங் போன்ற செம்பனைத் தோட்டங்கள் உள்ளன. இவர்களின் ஒரே கத்தோலிக்க வழிபாட்டு மையமாக இருந்து வந்துள்ள இச்சிற்றாலயம் இப்போது, போர்ட்டிக்சன் புனித அமலோற்பவ அன்னை பங்கின் பராமரிப்பில் இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த பிப்ரவரி முதலாம் திகதி, இப்பங்கிற்குப் பங்குத்தந்தையாக நியமனம் பெற்ற அருள்பணி எட்வின் பீட்டர் அவர்கள், தமது முதல் பணியாக இச்சிற்றாலயத்தில் ‘ஆண்டவரைக் காணிக்கையாக அர்ப்பணித்தல்’ விழாவை மையமாகக் கொண்டு, குழந்தை இயேசு திருவிழாவிற்கு ஏற்பாடு செய்தார். சில



குழந்தை இயேசு சிற்றாலயம்

ஆண்டுகளுக்கு முன்னர் பழுது பார்க்கப்பட்டு, சீர்படுத்தப்பட்ட இச்சிற்றாலயம் அன்று இறைமக்கள் நிறைந்திருக்கக் காணப்பட்டது. காடோங் பகுதியில் இருந்து அழைக்கப்பட்ட பாடற் குழுவினரின் உதவியோடு திருப்பலியையும், நற்கருணை ஆராதனையையும் அருள்பணி எட்வன் பீட்டர் சிறப்பாக வழிநடத்தினார்.



கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் ஓய்வுப்பெற்ற பேராயர் முர்ஃபி பாக்கியம் அவர்கள் இவ்விழவில் கலந்துகொண்டது, இவ்விழாவிற்கு மேலும் சிறப்பு சேர்த்தது.

அருள்பணி எட்வின் பீட்டர் விழாவைச்



சிறப்பிக்க ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி கூறினார். நிறைவாக, நற்கருணை ஆசீரோடும் இரவு உணவோடும் மக்கள் மனநிறைவோடு இல்லம் திரும்பினர்.

*-ஆர்.கே.*

# ‘தாய் மொழி காப்போம்’ உலக தாய்மொழி தினம்

மொழி என்பது மனிதர்களின் கல்வி மற்றும் மேம்பாட்டுக்கு உதவும் தகவல் தொடர்புக் கருவி மட்டும் தான் என்று பலர் நினைத்துக்கொண்டிருக்கிறோம், ஆனால் மொழி என்பது நம் பண்பாட்டு அடையாளம். இந்த உலகத்திற்கும் அதில் வாழும் மக்களுக்கும் மொழி என்பது ஒரு சமூகத்தின் அடையாளம். ஆனால், இன்றைய உலகமயமாதலினால் மொழிகள் அச்சுறுத்தலுக்குள்ளாகிவருவது மட்டுமல்ல, மறைந்துபோகும் அபாயமும் உள்ளது. சிறு சிறு மொழிகள் மறைந்து போகும் என்றால், கலாச்சார பன்முகத்தன்மையும் இல்லாமல் போய்விடும். மொழி அழிந்தால் மக்களின் பண்பாட்டு அடையாளம் அழியும். பண்பாட்டு அடையாளம் இல்லாத மக்கள், வரலாறு அற்றவர்களாகப் போவார்கள். ஒரு மொழி அழிக்கப்படுகின்றதெனில் அந்த மொழியை பேசுகின்ற சமூகத்தின் அடையாளங்கள் அழிக்கப்படும் முயற்சிகள் தொடங்கிவிட்டன என்பதே உண்மை.

**தாய்மொழியின் முக்கியத்துவம்**

கருவில் இருக்கும்போதே தாய்மொழிச் சொற்களை குழந்தை கேட்கத் தொடங்கி விடுகிறதாம். கருவில் இருக்கும் போதே 10 ஆயிரம் கலைச்சொற்களை குழந்தை




உள்வாங்கி வைத்துள்ளது என்று மருத்துவ வல்லுனர்கள் சொல்கிறார்கள். நம்முடைய எண்ணம், படைப்பாற்றல் தாய்மொழி வழியாகவே நடக்கிறது. உலகெங்கும் அடையாளம் காணப்பட்டிருக்கும் ஏறக் குறைய 6,000 மொழிகளிலும், 43 விழுக்காட்டு மொழிகள் அழியும் நிலையிலுள்ளன. இந்த மொழிகளில் பலவற்றைப் பேசுவோரின் எண்ணிக்கை வெறும் 1,000க்குள்ளாகவே இருக்கும். இந்த அழியும் அபாயத்தில் உள்ள மொழிகளில் 96 விழுக்காட்டை இந்த உலகில் வாழும் மக்களுள் 4 விழுக்காட்டினரே பேசுகின்றனர். சில நூறு மொழிகளே கல்விச் செயற்பாடுகளுக்கும் ஏனைய பொது விடயங்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. நூற்றுக்கும் குறைவான மொழிகளே தற்போதைய இணையம் போன்ற டிஜிட்டல் உலகில் பயன்படுத்தப்படுகின்றன. உலக மக்கள் தொகையில் 40 விழுக்காட்டினருக்கு அவர்கள் பேசுகின்ற மொழி அல்லது அவர்களுக்கு புரிகின்ற மொழியில் கல்வி கிடைப்பதில்லை.

தாய்மொழியின் சிறப்பு குறித்து பேசும்போது




நெல்சன் மண்டேலா, "நீங்கள் ஒரு மனிதனிடம் அவனுக்கு புரியும் மொழியில் பேசினால், நீங்கள் பேசுவது அவன் மூளைக்கு செல்லும். ஆனால், நீங்கள் அவனது தாய்மொழியில் பேசும்போது, அது அவனுடைய இதயத்துக்கு செல்லும்" என்று கூறினார்.


ஹரிஜன் பத்திரிக்கையில் மகாத்மா காந்தி, "எனது தாய்மொழியில் ஏதேனும் குறை பாடுகள் இருந்தபோதும், தாயின் மார்போடு ஒட்டிக்கொள்வதுபோல, எனது தாய்மொழியைப் பற்றிக் கொள்ள வேண்டும். அது மட்டுமே என்னை உயிரோடு வைத்திருக்கும்" என்றார்.

ஒவ்வொரு மொழிக்கும் சில தனித்தன்மைகள் உண்டு, அது அனைத்தையும் பிற மொழிகளில் மொழி பெயர்த்துவிட முடியாது. உதாரணமாக, தமிழில் 'மனம் குளிர வரவேற்கிறோம்' என்ற சொற்றொடரை ஆங்கிலத்தில் எப்படி மொழி பெயர்ப்பீர்கள்?. இதைவிட, உங்கள் வீட்டில் நீ எத்தனாவது குழந்தை என்ற கேள்வியை ஆங்கிலத்தில் எப்படிக் கேட்பீர்கள்?. ஆங்கிலப் புலமைப் பெற்றவர்கள் சொல்லித் தாருங்களேன்.

***கிறிஸ்டோபர் பிரான்சிஸ் – வத்திக்கான்***

# பினாங்கில், மறைந்த பேரருட் தந்தை அலோசியஸ் IJ அவர்களின் நினைவு திருப்பலி கொண்டாடப்பட்டது

பினாங்கு: புனித பிரான்சிஸ் சேவியர் தேவாலயத்தில் கடந்த பிப்ரவரி 17 ஆம் தேதி Msgr இக்னேஷியஸ் ஜோன் அலோசியஸ் அவர்களின் அருள்பணி வாழ்வை நினைவுகூரும் வகையில், அவரது 30 வது ஆண்டு நினைவுத் திருப்பலி கர்தினால் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள் தலைமையில் கொண்டாடப் பட்டது. இத்திருப்பலியில் ஓய்வுப்பெற்ற ஆயர் அந்தோணி செல்வநாயகம், மற்றும் அருள்பணியாளர்கள் அந்தோணிப் பிள்ளை, மார்ட்டின் அர்லாண்டோ, எட்மண்ட் வூன், டெஸ்மண்ட் ஜான்சன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.




பினாங்கு மறைமாவட்டத்திற்கான முதல் பேரருடதந்தையாக நியமனம் பெற்ற அருள்பணி அலோசியஸ் அவர்களின் அரும்பணியை நன்றியுடன் நினைவுகூர் கிறோம். மலாயா மற்றும் சிங்கப்பூரில் இறைமக்களுக்கு ஏறக்குறைய அறுபது ஆண்டு காலம் ‘Monsignor’ பொறுப்பில் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட இவர் 1978 இல் திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்களிடமிருந்து இந்த அங்கீகாரத்தைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது

கௌரவ பீடமாக 'Monsignor' என்ற பட்டத்தைப் பெற்றார், மேலும் 1982 இல் 'MEP இன் கௌரவ உறுப்பினராக' நியமிக்கப்பட்டார். 1983 ஆம் ஆண்டில், போப் இரண்டாம் ஜான் பால் அவருக்கு 'உயர்நியூமரி அப்போஸ்தலிக் புரோட்டோனோட்டரி' என்ற பட்டத்தை வழங்கினார். 1983-ல் திருத்தந்தை இரண்டாம் ஜோன் பவுல் இவருக்கு ‘Supernumerary Apostolic Protonotary’ என்ற கௌரவ பட்டத்தையும் அளித்தார்.

இறைமக்கள் சமூகத்தின் ஆன்மீகத் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில், Msgr அலோசியஸ் பினாங்கில், சுங்கை பினாங் பகுதி பகுதியில் புனித ஜோன் பிரிட்டோ (புனித அருளானந்தர்) தேவாலயத்தை 1969-லும், கோட்லீப் சாலையில் உள்ள புனித மேரி சிற்றாலயத்தயும், மற்றும் ஹாங் செங் தோட்டத்தில் புனித ஜோசப் சிற்றலாயத்தையும் நிறுவினார்.

அருள்பணி அலோசியஸ் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், புனித பிரான்சிஸ் சேவியர் பங்கில் கத்தோலிக்க மேய்ப்புப்பணி கழகமாக இவரது பெயரால் ‘Msgr அலோசியஸ் மேய்ப்புப்பணி கழகம் அல்லது ஆன்மீக மையம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்படும் என்றும் கர்தினால் அறிவித் தார்.

## உலக சமூக நீதி தினம்

**வத்திக்கான்:** கடந்த பிப்ரவரி 20-ஆம் தேதி, செவ்வாய்க்கிழமையன்று உலகில் சிறப்பிக்கப்பட்ட உலக சமூக நீதி தினத்தையொட்டி செய்தி வெளியிட்டுள்ள வளர்ச்சி மற்றும் ஒருமைப்பாட்டிற்கான திருஅவையின் அனைத்துலக ஒத்துழைப்பு நிறுவனத்தின் பொதுச் செயலர், **“மனித நலத்திற்கு சேவையாற்றவில்லையெனில் நாம் இங்கிருந்து என்ன பயன்”** என்ற தலைப்புடன் சிறப்பிக்கப்பட்ட அந்த உலக சமூக நீதி தினம் அனைவருக்கும்




சரிநிகர் தன்மையையும் மாண்பையும் உறுதிச் செய்வதுடன், மக்கள் பாதுகாப்புடன் வாழவும் வளரவும் தேவையான சுற்றுச்சூழலை உருவாக்கவும் உதவுகிறது என்றும் தெரிவித்தார்.

# நாணயம் மிகு ஆலயமாக உள்ளம் மாறட்டும்!

தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறுவில் நாம் இணைந்துள்ளோம். கடவுளுடனான நமது உடன்படிக்கை உறவின் பல்வேறு அம்சங்களைப் பற்றி இன்றைய வாசகங்கள் வலியுறுத்துகின்றன.

முதல் வாசகத்தில் பத்து கட்டளை நமக்கு வழங்குகிறது. முதல் சில கட்டளைகள் கடவுளுடன் மக்கள் எவ்வாறு தொடர்பு கொள்ள வேண்டும் என்பதைக் குறிக்கிறது. கட்டளைகளின் நோக்கம், உறவுகளின் உடன்படிக்கையின் மூலம் அவர்கள் மீண்டும் பிணைக்கப்பட்டுள்ளனர் என்பதை மக்களுக்கு உறுதிப்படுத்துவதாகும். நாம் கடவுளுக்குக் கட்டுப்பட்டவர்கள் மட்டுமல்ல, அவர்களைச் சுற்றியுள்ள மக்களோடும் கட்டுப்பட்டவர்கள் என்பதை நினைவூட்டுகிறது.

பவுல் அடிகள் கொரிந்தியர்களுக்கு எழுதிய முதல் திருமுகத்தில் காணப்படும் இன்றைய பகுதியில், புனித பவுல் இயேசுவின் செய்தியை யூதர்கள் ஏற்றுக்கொள்வது கடினம் என்று அறிவிக்கிறார். ஏனெனில், இயேசு தான் கடவுளின் மகன் என்று இயேசு கூறிக்கொள்வதில் அவர்களுக்கு உடன்பாடில்லை.



யோவான் நற்செய்தியில் இயேசு தனது பணியின் ஆரம்பத்திலேயே ஆலயத்தை தூய்மைப்படுத்துகிறார். அவர் தந்தையுடன் உறவில் இருப்பதால், மக்கள் கடவுளுடன் உறவை வைத்து இலாபம் ஈட்டும் தொழிலாக மாற்றியதைக் கண்டு இயேசு வருத்தமடைந்தார்.

'இக்கோவிலை இடித்துவிடுங்கள். நான் மூன்று நாளில் இதைக் கட்டி எழுப்புவேன்" என்று கூறியதைக் கேட்ட அவர்கள் அதிர்ச்சியடைந்திருக்க வேண்டும்.

ஏனெனனில் எருசலேம் ஆலயம் என்பது அவர்களுக்கு கடவுள் வாழும் இடம். ஆனால், இயேசு மாற்று போதனையைத் தருகிறார். இறைமக்களின் உள்ளங்களை கடவுள் வாழும் இல்லங்களாகக் குறிப்பிடுகிறார்.

இயேசு தம் பணியைத் தொடங்கிய நாளிலிருந்தே தாம் ஒரு புதிய ஒழுங்குமுறையை இவ்வுலகில் நிலைநாட்ட வந்ததாக அறிவிக்கிறார். அதன் ஒரு பகுதியே இன்றைய வாசகம்.

இன்றைய நற்செய்தியை நன்கு கவனித்தால், இங்கே கோவில் என்பது:

1.எருசலேம் தேவாலயம் பற்றியது.
2.இயேசு தன் உடலை ஆலயம் எனக் குறிப்பிடுவது.
3. திருஅவை கிறிஸ்துவின் மறையுடல்.
4. நம் ஒவ்வொருவரின் உடலும் தூய ஆவியின் ஆலயம். ஆகிய நான்கு பொருளைத் தாங்கியுள்ளது.

**தவக்காலம் 3-ஆம் ஞயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | வி.ப. 20: 1-17 |
| திரு.பாடல் | 19: 7. 8. 9. 10 |
| 2-ம் வாசகம் | 1 கொரி 1: 22-25 |
| நற்செய்தி | யோவான் 2: 13-25 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 3**

நம் அனைவருக்கும் நல்ல அறிவுறையாக விளங்கும் இன்றைய வாசகங்களின் போதனையை மனதில்கொள்வோம். ஆண்டவரின இல்லமாக விளங்கும் நம் உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவோம்.

*-ஆர்.கே.*